உ

தெய்வமேதுணை.

பதினெண்சித்தர்கள்

திருவாய்மலர்ந்தருளிய

# வயித்தியக்கண்ணாடி

## இரண்டாம்பாகம்.

இஃது,

சிறுமணவூர்

முனிசாமி முதலியாரால்

இயற்றப்பட்டு,

தமது

சென்னை சூளை

சிவகாமிவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1908.

51

# நூதன புத்தக விளம்பரம்.

| | | | |
|---|---|---|---|
| சுதேச கைத்தொழில் சாஸ்திரம், விலை ரூபா | 1 | 0 | 0 |
| சுகந்த பரிமள சாஸ்திரம் | 0 | 8 | 0 |
| சிவசொரூபசாஸ்திரம் | 0 | 8 | 0 |
| சரீரசாஸ்திரம் | 0 | 8 | 0 |
| விவாக சாஸ்திரம் | 0 | 8 | 0 |
| சகுனசாஸ்திரம் | 0 | 4 | 0 |
| ருதுஜெனனசாஸ்திரம் | 0 | 4 | 0 |
| நஷ்டஜாதகம் | 0 | 8 | 0 |
| நவகண்ட ஆரூடம் | 0 | 8 | 0 |
| பதிவிரதைகள் சரித்திரம் | 0 | 12 | 0 |
| உலகவிசித்திரக்கதை | 1 | 0 | 0 |
| இங்கிலீஷ் தமிழ் வைத்திய சிகாமணி | 3 | 0 | 0 |
| பிரபஞ்ச உற்பத்தி | 2 | 0 | 0 |
| சண்டாளர் சகவாசம் | 0 | 8 | 0 |
| வேதாந்த ஜட்ஜ்மெண்ட் | 1 | 0 | 0 |
| குடும்ப சனியனென்னும் அகடவிகட சம்சாரி | 0 | 4 | 0 |
| ருஷியா ஜப்பான் யுத்தம் | 0 | 4 | 0 |
| வியாசர்விபரீதம் | 0 | 4 | 0 |
| கண்கட்டுவித்தை 1000 | 0 | 10 | 0 |
| நாரதர்கலகம் | 0 | 6 | 0 |
| ஷை 2-ம் பாகம் | 0 | 4 | 0 |
| தெய்வகுணவெளிச்சம் | 0 | 8 | 0 |
| இந்தியா சமையல் சாஸ்திரம் | 0 | 8 | 0 |
| நூதன கலியாணப்பாட்டு | 0 | 4 | 0 |
| போலீசு ஆக்ட்டு | 0 | 4 | 0 |
| தேவஸ்தான ஆக்ட்டு | 0 | 4 | 0 |
| ஸ்டாம்பு ஆக்ட்டு | 0 | 8 | 0 |
| 8-வது ஆக்ட்டு | 0 | 8 | 0 |
| சாட்சி ஆக்ட்டு | 0 | 12 | 0 |
| தஸ்தாவேஜு ஆக்ட்டு | 1 | 4 | 0 |
| இந்தியன்பினல்கோட்டு | 3 | 0 | 0 |
| கிராம முனிசீப் கோட்டு | 3 | 0 | 0 |
| இந்துலா | 2 | 0 | 0 |

இப்படிக்கு.

சி. முனிசாமி முதலியார் கம்பெனி.

பெரம்பூர் பாரெக்ஸ் போஸ்டு, மதராஸ்.

T-UN-597

உ

கடவுள் துணை.

41 B. யோகமுநி

# வயித்தியக்கண்ணாடி

## இரண்டாம்பாகம்.

### வியாதிவருங்காரணம்.

ஆமப்பா மனிதர்செய்த கருமத்தாலே
அரகரா மேகமென்ற ராஜாவாலே
காமத்தால் விசனத்தால் பொசிப்பினாலே
கன்னியரை மிச்சமாய் புணர்வதாலே
போமப்பா நடையாலே கொலைகளாலே
பொழுதிரவு தெரியாத நித்ரையாலே
நாமப்பா கண்டகண்ட வியாதிவந்து
நலிவோர்க்கு கைமுறையை நன்றாய்க்கேளே. (க)

### திருஷ்டாந்தங்கூறல்.

கேளடா காமத்தால் கெட்டோர்கோடி கிளர்கின்ற கோபத்தால் கெட்டார்கோடி நாளடா ஆணுவத்தால் கெட்டார்கோடி நலமானதீயினால் மாய்ந்தார்கோடி வேளடா தோஷத்தால் வீழ்ந்தார்கோடி வீணாகக்கொலைசெய்து செத்தார்கோடி பாட்டர் நானென்றகெருவந்தள்ளி பண்பானவாகடத்தின் பயனைப்பாரே. ()

### சில வயித்தியர்கள் செய்கை.

வாகடத்தின் பயனறியார்நாடிகாணார்வளர்கையைப்பிடித்திழுத்துவார்த்தைசொல்வார் ஆகடியமாகவே நல்லோர்தம்மை அசத்திய நோய்வந்துதென்பார் ஐயோவென்பார் பேர்கிடக்கப்பேர் சொல்வார் வியாதிகட்கு பிணிதீர்ப்போமென்றுசொல்வார் தீர்க்கமாட்டார் ஓகோகோவயித்தியர்நா னென்றுசொல்வார் ஒருகாலுமோட்ச மில்லைநரகந்தானே. (உ)

பதினெண்பேர் சாஸ்த்திரத்தை திரட்டியானும் பதிப்பித்தேன் கண்ணாடிபோலேமைந்தா விதியறியாவயித்தியனை விரும்பவேண்டாம் வீணரிடம் கைகாட்டி விழிக்கவேண்டாம் ததியரியான் குறியறியான் கையைப்பார்ப்பான் தன்வாயில் வந்தபடி வார்த்தை சொல்வான் சதியாளன் பணங்கொடுத்தால் மருந்தையீவான் சண்டாளன் மறுபடியும் வாரேனென்பான். (௪)

## பித்தசுரத்துக்குக் கியாழம்.

கண்டுபார் பித்தசுரம்-பித்தவெட்டை கலங்காத அஸ்திசுரம் காணதோடும் கொண்டுப்பார் பேய்ப்புடலுங் கிராம்புசுக்கு கோரையாங்கிழங்குடனே நிலவேம்புமல்லி தண்டுமிண்டாய்செய்யாதே சமனாய்ச்சேர்த்து சாதகமாய்நீர்வார்த்துஎட்டொன்றாக்கி உண்டிடவேசொன்னதொரு சுரங்களெல்லாம் ஓடுமடாகதிர்கண்ட பனிபோல்தானே. (௫)

## சகலசுரத்திற்கும் கியாழம்.

தானென்றசகலசுரம் தீருதற்குசாற்றுகிறேனின்ன மொருவகையைக்கேளு வானென்ற வில்வவேர் விலாமிச்சம்வேர் வண்ணெரிஞ்சி நன்னாரி மதுரம்சோம்பு கோனென்ற விளாம்வோடு முத்தக்காசுகுலவு முந்திரிப்பழம் நெல்பொறியினோடே வீரனென்ற நெல்லிமுள்ளி யிலுப்பைப்பூவும் மணலுடனே சுக்கிவைகள் சமமாய்க்கொண்டே. (௬)

கொண்டேதானீர்விட்டுக் கியாழந்தன்னை கூர்மையுடன் எட்டொன்றாய் குருகக்காச்சி உண்டிடவே தாபசுரம்மயக்கந்தூக்கம் வொழியாதபித்தசுரம்நாவரட்சி அண்டாது ஐயர்மே லாணைகண்டீர் அடல்பெரியகுருவின்மே லாணைகண்டீர் திண்டோளி ரெந்தன்மே லாணைகண்டீர் நேசத்துமானிடரே செய்துபாரீர். (௭)

## சேத்தும சுரத்துக்குக் கியாழமும் அதற்கு பத்தியமும் கஞ்சியும்.

முறைமையென்ற தூதுவளை கண்டங்கத்திரி முயன்றதொரு செம்முள்ளி சுண்டைவேறும் வறுமையென்றசுக்குடனேகியாழம் பண்ணி வகையான திப்பிலிதூள் போட்டுஉண்டால் அருமையென்ற சேத்மசுரந்தீருந்தீரும் அதற்குடனே பத்தியந்தான் கஞ்சிகேளு திரமானவில்வயிலைபாதிரிப்பூ திராக்ஷபழம் பெருங்குமிழிவேறுநாலும் ஒருபடிஜெலத்திலரைப் படியாய்க்காச்சி உழக்கரிசிவருத்ததிலே போட்டுக்கிண்டி பருவமாய் காச்சி பத்தியமே தந்தால்பரக்குமடா சேத்மசுரம்பஞ்சுபோலே. (௮)

பித்தத்தினல் உதடு நாக்கு முதலான வெடிப்புக்கு.

பாரேநீபித்தவெடி வந்துதானல் பாங்கான * மருதுடைய யிலையைவாங்கி சேரேநீபசும்பாலில் ஊரவைத்து சிறப்பாக மூன் றுனள் குடிக்கச்சொல்லு வீரேநீபத்தியந்தான் பாலுஞ்சோறும் விதமாக ஏழாநாள் நீரைவாரு பேரேநீபோகருட கடாக்ஷத்தா லேபேதமில்லை புலிப்பாணி பாடினேனே. (௯)

* மறுதுடையபிலை மறுமாங்காயிலை.

எலிகடி ௰அ-க்கும் மருந்து.

பாரோநீ யின்னமொன்று சொல்லக்கேளு பதினெட்டுயெலி கடிக் குமருந்தையப்பா வீரோநீகரும்பூனை மலத்தைவாங்கி வித மாக கெச்சக்காயளவுதானும் கூரோநீ பனைவெல்லக் கட்டியப்பா குணமாக அவ்வளவுகூடச்சேர்த்து சேரோநீ மூன்றுநா ளாறுவே ளை செயலாகக்கொண்டிடவே திரும்பாரோ. (௧0)

அதற்குப் பத்தியம்.

பாரப்பா ஆறுநாள் பத்தியமேகாறு பண்பான உப்புமுத லொன்றுமாகா வீரப்பா ஏழாநாள் தலையைமுழ்கு விதமாக உப் பிட்ட பருப்புமாகும் சேரப்பா எட்டாறு ளெல்லாங்கூட்டு செய லாகநாட்சென்றல் சொல்லக்கேளு கூரப்பா மூன்றுகெடு கொண் டாயானல் குணமாகயெலிகடிகள் தீருந்தானே. (௧௧)

நரிநாய்கடிக்கு மருந்தும் பத்தியமும்.

தானென்ற பேய்நரிநாய் கடித்துதானல் தழைத்தமணித்தக் காளியிலைச்சாரப்பா பானென்றபடிக்கால்தான் கொடுப்பாயப்பா பாங்காக மூன்றுநாளாறுவேளை கோனென்ற பத்தியந்தா னுப் பாகாதுகுணமாகும் ஏழானள்நீரைவாறுவேனென்றபேய்நரிநாய் கடிதான்திரும் விதமாகு மிதின்தழையை மேலேபூசு. (௧௨)

பூனைகடிக்கு மருந்து மேற்கூறியபடியே பத்தியம்.

பூசியே பூனைதான் கடித்துதானல் புனிதமுள்ள* பூனைதொ ழும்பட்டைவாங்கி ஆசியே பசுவின்பால் தனிலரைத்து அப்பனே பத்தியமாய் குடிக்கச்சொல்லு கூசியே முன்போல பத்தியமே காரு மணமுள்ளநீலிவேர் தனையரைத்து வாசியே யீராறுநாளும் ஆசு ஒகையா கப்பூனைகடி தீருந்தானே. (௧௩)

* பூனைதொழும்பட்டை குப்பைமேனிபட்டை.

## நாராண்டின் வேப்பம்பட்டை.

போமப்பா யிதுகடந்து பின்புநீதான் புகழ்பெறவே நாராண்டின்வேம்பைப்பார்த்து ஆமப்பா பட்டைதனை வெட்டிவந்து அப்பனே நிழலுலர்த்தா யுலர்த்திப்பின்பு காமப்பா யிடித்து நன்றாய் சூரணமேசெய்து கறிச்சாலை மல்லிகையின்சாற்றாலாட்டி தேமப்பாயேழுதிரம் திரமாய்ச்செய்து சிறப்பாக ஒருகடிதான் கொண்டிடாயே. (கச)

(வ-ம்) கரிச்சாலைபின்சாறும் மல்லிகைப்பூச்சாறும் சரிபாகமாய்விட்டு அறைத்து பில்லைதட்டி நிழலில் வைக்கவும் உலந்தபின்பு முன்போலவே சாறுவிட்டு அறைந்து நிழலில் உலர்த்தவும் இப்படி ஏழுதிரம்செய்து குறுஞ்சித்தேனில் குழைத்து நாற்பதுநாளுண்ணவும், (கரு)

கொண்டிடவே அனுபானம் வகையைக்கேளு குறிஞ்சித்தேன் தனில்குழைத்து நாற்பதுநாளுண்ணு விண்டிடவே அந்திசந்திதனை வாய்க்கொள்ளுமேனியெல்லாங் கருங்காலிவைரமாகும் துண்டிடவே நரைதிரைகளெல்லாமாறும் சுக்கிலந்தான் வேலிருக்குங் கீழோடாது கண்டிடவே ஆறுதலம் வெளியாய்க்காணும் காலனுமே அஞ்சிடுவான் காணுகாணே. (கசா)

## சிந்தில்பஸ்பம்.

கானென்ற பொற்சிந்தி யானால்நன்று சாதகமாய் சிகப்புநன்று கிடையாவிட்டால் பானென்ற நற்சிந்தி மேல்தோல்போக்கி பருந்துண்டாய்க் கொண்டுவந்து நறுக்கிக்கொண்டு கோனென்ற நிழலுலர்த்தி சூரணமாய்செய்து கூரான * கற்கண்டு சமபாகஞ் சேர்த்துவேனென்ற ஒருகடிதானந்திசந்தி வெருளாமல் மண்டலமே உண்ணுபாரே. (கஎ)

* கற்கண்டு பனங் கற்கண்டு.

பாரப்பா மேகமென்ற தெல்லாம்போகும்பரிவானவாதபித் தம்பரந்தேயோடும் சேமப்பா கபாலத்தின் வெட்டைபோகும் ஜெகமறிந்த அஸ்திசுரம் விட்டேயோடும் தாமப்பா தாதுவிர்த்தி தழைக்குந்தேகம் சதிரான ஆறுதலம் வன்னிமீறும் சாரப்பர்சிந்திக்குசாகோயில்லை சாஸ்திரத்தைப் பொய்யென்று சாகாதேநீ,

## சிகப்புக்கத்தாழை.

கொள்ளவே சிகப்புக் கத்தாழைதன்னை கொண்டந்திசந்தி மண்டலமேயுண்ணு விள்ளவே திரேகமதில் கஸ்தூரிவீசம் வேர்வைதான் தேகத்தில்கசியாதப்பா துள்ளவேநரைதிரைகளெ[illegible]லா

மாறும் சோம்பலென்ற கொட்டாவி நித்திரையுமில்லை கள்ளவே யிந்திரியம் உடம்பிலாறும் கண்களுமே செவ்வலரிப் பூப்போலாமே. (௧௯)

(வ-ம்) சோத்துக்கத்தாதழையில் சிகப்புக் கொண்டுவந்து மேல்தோல்சிவி நடுச்சோற்றை ஏழுதிரம் ஜெலத்தி லலம்பிபனங் கற்கண்டுபோட்டு பிசரி தலைமாட்டில் வைத்துக்கொண்டு மூணு ஜாமம் சாப்பிடவும் கண்குளிரும் மேகம்வெடுக்கும் திரேகம் பசுமையாகும் சோம்ப லென்பதேயில்லை ௪௦-நாள் சாப்பிடவும். ()

மலஜலங்கட்டினல் மருந்து.

மங்காதகுழன்மடவீர் சொல்லக்கேளீர் வாயுவினல் சிற்றின் பமதிகமானல் தங்கிநின்ற விருவாயுங் கட்டிக்கொள்ளுந் தாரணியில் மானிடர்கள் சகிக்கமாட்டார் வெண்காரஞ் சவக்காரஞ்சீனக்காரம் வெண்மதியாமிந்துப்பு வெதுப்பிக்கொண்டு சிங்காரவிளநீரில் கொள்வீராகில்சிக்காது மலசலங்கள் திண்ணந்தானே.

சிறுபிள்ளைகள்வளர கைமுறைகள்.

தானென்ற தோஷபிள்ளைகட்கு தயவாகச்சொல்லுகிறேன் தண்ணீர்மிட்டான் மானென்றசாரு வெண்மறிவின்பாலும் மைந்தனே ஆவின்பால் தேங்காய்ப்பாலுந் தேனென்றஆவிநெய்திரமாய்வாங்கிதே சிகனேவகைவகைக்குப் படிகாலப்பா கோனென்ற சீனியது கற்கண்டோடு கொற்றவனே பலமைந்து கொண்டு சேரே. (௨௨)

* வெண்மறி வெள்ளாடு.

சேர்த்தபின்பு அடுப்பேற்றித்தீயைமூட்டு சிறுகயெரிமெழுகு பதஞ் சிவக்கும்போது கோத்தெடுத்து வடிகட்டிக்கொண்டு தானும் கொற்றவனே கரண்டிவிதங்கொடுத்தாயானல் கார்த்திருந்த கணம்நீங்கி கரும்புபோலாம் சுட்டழகும்பிள்ளைக்கு * களையுமுண்டாம் பூத்தமறை போகருடகடாட்சத்தாலே புலிப்பாணி புவிதனிலேபுகட்டினேனே. (௨௩)

* களை அழகு.

குழந்தைகள் சிரங்குக்கு.

அரையுரேனின்னமொரு வெண்ணெயப்பா அனல்மீறிகுழந்தைகட்கு அங்கமெல்லாம்நிறையவேசொரிசிறங்கு நின்றதானல் நிலவரமாயாமணக் கெண்ணெயோடு மனையானமேனியுடன் மணத்தக்காளிமைந்தனே முடக்கற்றான் வகைப்படிக்கால் குறையாமல் நாக்குரட்டைய ரைத்தசாந்து கூட்டிவாய் எழுமிச்சம்பழத் தின்பாரே. (௨௪)

வாருகக்காய்ச்சிவடித் தெடுத்துக்கொண்ட வகையாகக் கரண்டி முறைகொடுப்பாயப்பா நேராகப் பத்தியந்தா னிச்சாபத்தியம் நிச்சயமாயைந்து நாளேழுநாளாம் சீராகத்தலைமுழுகிவருவாராகில் சிறுசிரங்கும் பெறுஞ்சிரங்கு மில்லாதோடும் பேராகபோகருட கடாக்ஷத்தாலே பேசினேன் புலிப்பாணிபேசினேனே. (உ௫)

## பிள்ளைபெறமாட்டாதவர்க்கு.

பாடியேபிள்ளைவெளி காணுதபேர்க்கு பண்பானகிழ்க்காய் நெல்லிமூலம் வாடியேபோகாமல் வளையவாட்டி வசமாக இடக்கால் பெருவிரலில்போட நீடியேபிள்ளை வெளிகாணுமப்பா நினைவாக இன்னமொருவேரைக்கேளு சூடியேமின்னைவேர் தனையெடுத்து சுரபியெனும் பசுவின்பால் தனிலரைத்தே. (உசு)

அரைத்தெடுத்து உள்ளுக்குக்கொடுத்தால் பிள்ளைஅப்பனே கீழ்விழுந்து அழுகும்பாரு மறைத்தபொருளென்று நீமயங்கவேண்டாம் மகாகோடிபுண்ணியங்க ளுனக்குண்டாகும் துரைத்தனமா நீ யலைந்து திரியவேண்டாம் துய்யமெனும் நூல்களெல்லாம் துணிந்துபாரு உரைத்தகுரு போகருடகடாக்ஷத்தாலே உரைத்திட்டேன் புலிப்பாணியுலகில்தானே. (உஎ)

## அக்கினிமந்தத்திற்கு லேக்கியம்.

தானேதான் திரிகடுகு ஓமம்வாய்விளங்கந் தயவாகவகைவகைக்குவிராகனைந்து போனென்ற பொடிப்பண்ணி சக்கரைநேர்சேர்த்து பொங்கியதேன் படிக்கால்நெய்ப்படிகால்வார்த்து கோனென்றுபிசைந்ததிலே வைத்துக்கொண்டு குணமாக நெல்லிக்காயளவுகொள்ள வானென்ற வாயுஅக்கினியுமந்தம் வாங்குமடா போகருடகடாக்ஷந்தானே. (உஅ)

## சூட்டுக்கு முழுக தாமரைத்தயிலம்.

தானுனயெள்ளெண்ணெய் படிதானென்று தகைமைகுளிர்த் தாமரைச்சார் படிதானென்று மானுனபதந்தனிலே காய்ச்சியப்பாபக்குவ மாய்க்கிழிறக்கித் தானேவைத்து மானுகுபூலாக்கிழங்குப் பச்சிலையிலப்பா வகைவகைக்கு விராகனைந்து நிறுத்துக்கொண்டு தேனுகப்பொடிப்பண்ணித் தூவிப்போடு தெளிவாகவடித்திறுத்து முழுகுவாயே. (உகூ)

முழுகையிலே சூடெல்லாந் தணிந்துபோகு முன்னலையா கண்ணெரிவு குளிர்ச்சியாகும்பழுகாது திரோகமது பொன்போல் மின்னும்பண்பானநீர்கடுப்புவினையுந்தீரும் அழுகாதுவிந்துவங்கே

இருக்கும்பாரு அடவாசமூலத்திற் சூடும்போகும், கழுகாது
சூலையுட கருணைவாங்கும் நலமானபோகருட கடாக்ஷந்தானே.

### சகலரோகத்திற்குச் சித்திரமூல எண்ணெய்.

ஆருதசூட்டுக்கு எண்ணெய்சொல்வேன் அடவாகஎள்ளெ
ண்ணை ஆவின்நெய்யும், கூருகவகைவகைக்குப் படிதான்பாதி
கொடிதான சித்தருட * மூலப்பட்டை நேராகப்பலமொன்று
நீர்விட்டாட்டி நேராகஎண்ணையிலே கலக்கிப்போட்டு, மீருத
மெழுகுபதந் தனிலிறக்கி மிஞ்சாமல் துட்டெடைதான் கொண்
டுபோரே. ௨௯

### * மூலப்பட்டை சித்திரமூலப்பட்டை.

பாரோநீநாற்பதுநாள் கொண்டபோது பாங்கான சூடெ
ங்கே மேகமெங்கே, வீரேநீ விப்புருதிகண்டமாலை விதமானபுண்
புறைகள் சிறங்குந்தீரும், தீரோநீவாயுவொடுசூலை குத்துதிறமான
செங்கிரந்தித்தடிப்புமாறும், சேரோநீபத்தியந்தா னிதற்கோயில்
லைசெயலான போகருடகடாக்ஷந்தானே. ௩௦

### வயிற்றிளைச்சல் பேதிக்கு.

சேரோனீ யின்னமொன்று சொல்லக்கேளு செயலானமிளகு
பல மிரண்டுவாங்கி, நேரேநீ வேலியுடபருத்திச்சாறு நிறைய
விட்டு ஊறவைத்து வுலறப்போடு, கூரோநீவறுத்துமிகப் பொடி
யாச்செய்து கொற்றவனே வெருகடியாய்த் தேனிற்கொள்ள,
வீரோநீ வயிற்றிளைச்சல் பேதிநிற்கும் விதமாகப்பொருமலுடன்
வாயுபோமே, ௩௧

### வயிற்றிளைச்சல்-இரத்தக்கடுப்புக்கு.

போமேனீயின்னமொன்று சொல்லக்கேளு பொலிவாகனீ
ர்ப்பூண்டு பலந்தான்ரண்டு, ஆமேனீயெழுத்தாணி யிலையைத்தா
னும் அடவாகரண்டுபல மெடுத்துக்கொண்டு தாமேநீநெய்தனி
லே வதக்கிமைந்தாதய வானயேல மதுவிராகனென்று, வாமேநீ
சீனிபலமொன்று கூட்டிவகையாகத் தானரைத்து எடுத்துகொ
ள்ளே. ௩௨

கொள்ளப்பாமுள்ளுக்காய் வீதமாக கொற்றவனே மூன்று
நாளாறுவேளை, தெள்ளப்பாவயிற்றிளைச்சல் கடுப்புரத்தந்தெளி
வில்லா மூலமதின் சூடுந்தீரும், அள்ளப்பாபத் தியந்தானிதற்
கோயில்லைஐயனே தயிர்பாலும் நெய்யுங்கூட்டு விள்ளப்பாபோ
கருட கடாட்சத்தாலே வித்தாகப் புலிப்பாணி பாடினேனே,

## முளைமூலத்துக்கு கட்டு.

பாடினேனின்னமொன்று சொல்லக்கேளு பண்பானகோ
வையுட இலையைக்கட்டி, நாடினேன் கம்பஞ்சோ ருக்கிபின்னை
நலமாகத்தானுருட்டி நீணாவாரு, கூறுகிறேனெட்டுநாள் கடந்த
சோறு கொற்றவனே முன்னிலையுமெடையாய்ச்சேர்த்து ஆடுறே
ணுறுநாள் கட்டும்போது அடியோடேமுளை மூலமகன்றுபோமே.

## வல்லாரை மூலிகை.

சூக்ஷமாம் வல்லாரை கொண்டுவந்து சுகமாக மிளகுள்ளி
வொக்கச்சேர்த்து, சூக்ஷமாமென்று தின்னக்காலமேதான் சுளு
வாகவாய்க்கசப்புவாய்னீராதல், சூட்சமாயிவையெல்லாம் போ
கும்பாரு சொன்னதொருபச்சிலைதான், பொய்யாதப்பா சூட்ச
மாய் வயித்தியர்களறியாரிந்நூல் சொல்லுதற்கு நாவுண்டோ
மெய்யாம்பாரே. ௩௫

## பூரான்கடிதீர.

பாரப்பா பூரான்தான் கடித்தபேர்க்குப் பண்பான எருக்
கம்பூநரம்பைப்போக்கிச், சீராகப்பூவேழு கொடுத்துப்பாருசிறப்
பாக * ஞாளிமலம் புகையைக்காட்டு, கூறப்பாநாட்சென்றால்
மண்டலங்கொள்குணமாகப் பத்தியந்தானில்லைப்பாரு, வீரப்பா
பூரான்தான் தடிப்புமாறும்விதமாக அதின்விடமும் தீருந்
தானே. ௩௬

* ஞாளிமலம்யென்றால் நாய்மலம்.

## செய்யான் பெருச்சாளிகடிக்கும்.

தானென்ற செய்யான்தான் கடித்தபேர்க்கு தயவாகக்
கொல்லனுடக் கோவைமூலம், பானென்றபாக்களவு கொள்ளச்
சொல்லு பண்பான * மயிற்பீலிபுகையைப்போடு, கேளனென்ற
செய்யான் தன்விஷமும் போகுங் குணமான பெருச்சாளி கடி
தான்தீரவேனென்றஅறுகம்வேர்வெள்ளிதன்னில்விதமாகக்குடி
த்தவுடன் தீர்ந்துபோமே. ௩௭

* மயில்பீலியென்றால்-மயிலிறகு.

## தேள்காலிவிஷந்தீர மூலிகை.

போமப்பா தேள்காலி கடித்தபேர்க்குப் பொங்கமுடன்
பெரிய நங்கைவேரைத்தானும், வாமப்பாநீரிலே உரைத்துப்பூச
வளமாக * மட்டிப்பால் புகையைப்போடு, ஆமப்பா கடுகடுப்பு
அடங்கிப்போகும் அப்பனே தேள்காலிவிஷமுந்திரும்நா மப்பா
போகருடகடாட்சத்தாலே நலமாகப்புலிப்பாணி பாடினேனே.

* மட்டிப்பால்என்றால்-சாம்பிராணி.

சகல விஷங்களுந்தீர மருந்து.

பாடியதோர் விஷங்களெல்லாந் தீரவேதான் பண்பாக எட்டி பழந்தன்னைவாங்கி, கூடியதோர் சட்டியிலே வேணமட்டுங்குணமாகத்தானெடுத்து வேப்பெண்ணைவிட்டு, நாடியே அடுப்பேற்றி வேகவைத்து நலமாக உருட்டியதைச் செப்பில்மூடி தாண்டியே விஷந்தீண்டி வந்தபேர்க்கு தூதுவளங்காயளவு கொத்திடாயே. ௩௯

சிறுபாம்புகடிக்கு மருந்து.

போடப்பா சிறுபாம்பு கடித்தபேர்க்குப் பொங்கமுடன் சிறுகுறிஞ்சான் வேரைவாங்கி, நாடப்பா வெந்நீராலரைத்துக் கொண்டுநலமான ஏழுநாள் சலத்தைவாரு, சாடப்பாசிறுபாம்பு கடிப்புமாறுஞ் சார்பாகபோகருட கடாக்ஷந்தானே. ௪0

விதவையைக்கூடப் பிள்ளையில்லாதிருக்க.

தானப்பாகன்னியர்கள் விதவைக்கூடித் தான்தழுவவேணுமென்றால் சொல்லக்கேளு மானப்பா தலைமுழுகும் * பக்கந்தன்னில் மைந்தனே புணர்ந்திடவே கெர்ப்பமில்லை வீணப்பா இதுவறிய மாட்டாமல் தான் விதமாகக் குலைகள்வந்து நேரும்பாரு ஊணப்பா இதுவல்லோ பாவம்பாவம் உத்தமனே அறிவாலே அறிந்துகொள்ளே, ௪௧

* பக்கம் வீட்டுக்குத்தூரமாகியபட்சத்தில் நாள்முன்பாகசேற.

வேறு-பித்தவாந்திக்குக்கியாழம்.

கொத்தமல்லிக்*கூவிளங் குறுந்தமுட்டிநெற்பொரி
ஒத்தசுக்குமுத்தமோ டுருத்தநீருழ்க்கதாய்
கத்ததிண்டிசர்க்கரைக் கலந்துடன் குடிப்பிராய்
சத்தியென்றதோர்க்குமோ தவிர்க்கலாகுமென்பரே. ௫௨

* கூவிளம்—வில்வம்

விக்கலுக்கு.

எட்டுதிப்பிலி யீரைந்துசீரகம்
கட்டுதேனில் கலந்துண்ணவிக்கலும்
விட்டுப்போடும் விடாவிடில்பொஸ்தகம்
கட்டுப்போடுநான் தேறனுமல்லவே. ௪௩

மயிர்முளைக்கத் தயிலம்.

காருநாய்கரிச் சான்பட்டையார்பலம்
பாருபேருறையாள்பலம் * வெள்ளுள்ளி *மயிர்மாணிக்கம்

சேருவாய்பழஞ் சேர்த்துநறுக்கியே
ஏருவாய்நாழி யெள்ளெண்ணெயூற்றிடே சச

ஊர்த்திடுங் கதிரோன்புடமேனிதம
போர்த்திடுமிரு போதுமோரேழுநாள்
சேர்த்திடில்மயிர் சேரமுளைத்திடும்
மோத்திடும்பத்திய மில்லைக்கார்த்திடே. சரு

மன்மதக்குழம்பு.

ஏர்நிலப்பனை யின்கிழங்கோர்பலம்
தேர்தண்ணீரு விட்டான்கிழங்கோர்பலம்
தேர்நெரிச்சிவேர் சேர்த்திட்டொருபலம்
பார்வரத்தாவின் பாலுழக்கூட்டிடே. சசா

கூட்டமோனக் குழம்புகொதித்துடன்
மூட்டுனித்தம் முனைந்துகுடித்திடில்
காட்டுவீரியங் கைகண்டதிம்முறை
மாட்டுலக்கையா மல்குலிற்கண்டிடே. சஎ

முழங்கால்வாதம்.

செப்புவேன் முழங்காலின் வாதங்கண்டால்
ஒப்பும்வீழிப் பிண்ணாக்குடனவாரை
தப்பும்வெள்ளுள்ளி தாக்கும்விளக்கெண்ணை
ஒப்புமூன்றுமே வேதிட்டுக்கட்டிடே. சஅ

வாந்திபேதிக்குச் சூரணம்.

தேறவேயின்னமொருசூரணங்கேள்திறமானஎட்டியுடவட வேர்வாங்கி கூடவேமேல்தோலைப் பழச்சாற்றுலாட்டி, குணமாக ரவியுலர்த்திச் சூரணமேசெய்து மீறவே பதனமாய்வைத்துக் கொண்டு மேன்மையுடன் புரமெரித்தார் தும்பைரண்டும் ஏழ வேகியாழமிட்டுச் சூரணந்தான் இன்பமுடன் கடலையிடையிட் டுக்கொள்ளே. சகூ

கொள்ளவே சுகபேதி தீருமப்பா குணமாகமீறியது பேதி யானால்விள்ளவே மறுபடியுங் கிஷாயத்தில்தாக்கு மீறுகிறவாந் தியொடு பேதிதீரும் உள்ளவேகாதடைப்பு சங்கிவேர்வை [illegible]தத மனேதீருமடா மூன்றுவிசையிய வள்ளவேவறுத்தரிசி [illegible]ஞ்சி கொள்ளு மைந்தனே ஊழியதுபறக்கும்பாரே. ருo

## குழந்தைகட்கு வாந்திகண்டால்.

பூட்டுகிறேன் குழந்தைகட்கு வாந்திகண்டால் பூவென்ற கிராம்பதிவிடையந்திப்பிலி நாட்டுகிறேன் சுட்டசாம்பல் நன்றாகப் பொடிசெய்து தேனிற்சேர்த்து ஊட்டவேவாந்தியது ஒழிந்துபோகும் உண்மையிதுதவறாது உறுதிமெத்த ஆட்டமிகும் போகருட கடாக்ஷத்தாலே அப்பனே புலிப்பாணிபாடினேனே.

## கற்றாழைநாற்றந்தீரக்கூட்டு.

உலகினிலே மானிடர்க்கு கற்றாழைநாற்றம் ஓடிவிடசாந் தொன்று உரைக்கச்கேளு, * நல்நாரி கரந்தையுடவேறுங்கூட நன்னாரி வேருடனேமுத்தக்காசுங் குலமிலகுங்கஸ்தூரி மஞ்சள் தானுங் கூட்டியே வகைவகைக்கு விராகனேந்து கலக்கமில்லையரைத்ததனை முதட்டில்பூசக் கண்டோடுங்கற்றாழை நாற்றமெண்ணே. ருஉ

* நலநாரி-சிவக்கரந்தை.

## பிளாஸ்திரி.

பாடுகிறேனின்னமொரு பிளாஸ்திரிகேளுபாங்கானவிளாம்பிசினுங் கருங்குங்கிலியம் நாடுகிறேன் சமன்கொண்டுவுருகும்போது நலமானவிளக்கெண்ணை கூடவிட்டுஆடுகிறேன்வடிகட்டி கலசந்தன்னில் அடவாகத்தானடைத்துத் துணியில்பூசி சூடுகிறேன் ரணங்கள்மேல்ப் போடஆறும் சுகமாக அனல்காட்டிப் போட்டிடாயே. ருங

## வேறுமுறை-பிளாஸ்திரி.

போட்டிடவே யின்னமொரு பிளாஸ்திரி சொல்வேன் புகழ்பெரிய *மரத்துவெள்ளைப் பலந்தானேந்து கூட்டிடுவாய் பூரவிடை விராகனேந்து கூட்டியேதானரைத்து பொடியாகச்செய்து மாட்டிடுவாய்தென்னங்காய் யெண்ணையாலே மைந்தனே தானரைத்துத் தண்ணீர்விட்டு, ஆட்டிடுவாய்த் * தவளம்போ லாகுமட்டும் அப்பனே புண்மேலே போடப்போமே, ருச

* மரத்துவெள்ளை-வெள்ளைகுங்கிலியம். * தவளம்-வெள்ளை.

உ

கடவுள் துணை.

## தாதுபுஷ்டிக்கி

# மன்மதலேக்கியம்.

லேக்கியங்கேளாண்டே - மன்மத - லேக்கியங் கூறுகிறேன் வாக்கியமாய் தாக்கிடும்நோய்களெல்லாம் - தாது - புஷ்டியுடன் விந்திரியக்கட்டு முண்டாம் பூவகைமுறையாண்டே - இதை புசிக்கத் துணிந்தவனே காமியாண்டே தாவியமலைமுனிக்கு - சற்குருவாம்-சண்முக மளித்தமுறை இதுஆண்டே தென்னம்பூ பனம்பூவாம்-தேரின - செண்பகப்பூ கடுக்காப்பூ சிறுநாகப்பூ மாம்பு வசம்பு கிரும்புகாமப்பு கஞ்சாப்பூ வில்லுவப்பூ சரிச்சாலைப்பூ கண்டங்கத்திரியின்பூவு-காட்டு அத்திப்பூக் கருவேலன் மரத்துப்பூவாம் நெல்லிப்பு நீர்முள்ளிப்பூ நெரிஞ்சிப்பூ மல்லிகைப்பு மாதுளம்பூ மருக்காளைப்பூ ரோஜாப்பு குங்குமப்பூ - சூரிய-காந்திப்பூஆவாரம்பூ அமுக்கிருப்பூ புங்கம்பூ வேப்பம்பூ-பொற்கரையான்-பூவுடனே தாமரைபூ தூதுளம்பூவாம்கொத்தமல்லி துளசிவிரை-நீர் முள்ளிவிரை சப்ஜாவிரை கசகசாவாம் ஜாதிக்காய் வால்மிளகு-பூனைக்-காலிவிரை நாயுருவி யரசம்பட்டை மயிர்மாணிக்கமுடனே-சாலாம்-பிசினிநன்னாரிவேர் அதிமதுரம் ஆலம் விழுது துளிர்-சுக்கு-ஆகியதினுசுகள் வகைவகைக்கும் ஒவ்வொருபலமெடுத்து நன்றாய்-உலர்த்தியிடித்து சிறுதூளாக்கி சீலையில் வடிதாக்கி-மறுபடியுமிடித்தெடுக்க வசமாண்டே. தந்தின

பாலொருபடியாண்டே - பசும் பாலென அளந்து மண்பாண்டத்திலே வார்த்தடுப்பேற்றுண்டே-நல்ல வகையாம்ஒருவித விரகாலே யெறியொருநாழியாண்டே - முன்னே -யிடித்து வைத்திருக்குஞ் சஞ்சீவியை மதலையீணுதமடவாம் - நல்ல - மங்கிலிய ஸ்ரீயிடத்தி லதைக்கொடுத்து தூவிக்கொண்டிருக்கையிலே நீ-துரைத்தனஞ்செய்யாமல் கிளராண்டே சஞ்சீவிமுடிந்தவு[ட]ன் நல்ல-சாரபருப்புகால்படியாண்டே வாதுமைபருப்புழக்கு-[ந]ல்ல திராக்ஷபழத்திலஞ்சு பலந்தாக்கு பேரீச்சம்பழஞ்சேர்த்து இ[ந்]த

நாலும் புகட்டிநன்றாய்க்கிளறு செவ்விளநீர்வாரு-கால்படி- சேர்த்தபின் சீனியைந்துபலம்போடு பசுநெய்சேர்த்தாடு-பணங்-கற்கண்டு அதுவே யிடைஜாடு தேனில் உழக்குத்தேடு - ஆண்டே தீர்ந்ததுலேகியம் இனிகேளு அடிபிடிக்காமல்ஜாடு - ஆண்டே அடுப்பைவிட்டிறக்கிமேல்மூடு.

தந்தினத் தனதனனம்-தன்னனம்
தந்தினத் தந்தின தனதனனம்

விருத்தம்.

மன்மதனார்லேக்கியந்தான் முடிந்துதாண்டே
மண்டலத்திலிதன்பெருமை யென்னசொல்வேன்
பொன்போலேதிரேகமது வீசுமாண்டே
பெண்களொருஆயிரமும் போருதாண்டே
பின்துடர்வார்மேல்விழுவார் பொருளேயீவார்
பிலமிருக்குதென நம்பி கெட்டிடாதே
கன்மமதுவனைச்சூழ்ந்து கழுதையாக்கும்
கைதொடுத்தமனைவியின்றி புறம்போகாதே.

வசனம்.

இந்தலேக்கியம் சாப்பிடும்போது முதல் ஸ்நானம்செய்து மறுநாள் பேதிக்கிசாப்பிட்டு மைத்தானுள்முதல் லேக்கியத்தை புன்னைக் காயளவு சய - நாள் சாப்பிடவும் இந்த சய-நாளும் இச்சாபத்தியமாக யிருக்கவேணும் காலை மாலையும் பால் - நெய் தயிர் யிதுகளை சேர்த்துக்கொள்ளவும் எண்ணைகடுகுகூடாவாம் முக்கியமாய் ஸ்திரீபோகம் பொடி-சுருட்டு லாகிரி வஸ்துக்களை நினைக்கப்படாதாம்.

வயித்தியக்கண்ணாடி
முற்றுப்பெற்றது.

# இதிலடங்கியிருக்கும் மருந்தின் அட்டவணை.


பித்தசுரத்துக்குக் கியாழம்
சகலசுரத்துக்கும் கியாழம்
சேத்துமசுரத்துக்கு கியாழம்
எலிகடி ய அ-க்கும்மருந்து
நரிநாய்கடிக்கு மருந்து
பூனைகடிக்கு மருந்து
சிந்தில் பஸ்பம்
மலஜலங்கட்டினல்மருந்து
சிறுபிள்ளைகள்வளரகைமுறை
குழந்தைகள் சிரங்குக்கு
பிள்ளைபெறுதவர்களுக்குமரு
அக்கினிமந்தத்திற்கு லேகியம்
சூட்டுக்குமுழுகதாமணாத்தயி
சகலரோகத்திற்குசித்ரமூலயெ
வயிற்றிரைச்சல் பேதிக்கு
வயற்றிரைச்சல் இரத்தக்கடுப்
மூளைமூலத்துக்கு கட்டு
வல்லாரைமூலிகை பூரான்கடிதீர
செய்யான் பெருச்சாளிகடிக்கு
தேள்காலிவிஷந்தீர மூலிகை
சகலவிஷங்களுந்தீர மருந்து
சிறுபாம்புகடிக்கு [லாதிருக்க
விதவையைக்கூடப் பிள்ளையில்
பித்தவாந்திக்கு கியாழம்
விக்கலுக்கு
மயிர்முளைக்கத்தயிலம்
மன்மதக்குழம்பு
முழங்கால்வாதம்
வாந்திபேதிக்குச்சூரணம்
குழந்தைகட்குவாந்திகண்டால்
கற்றாழைநாற்றந்தீர
பிளாஸ்திரி
வேறுமுறை பிளாஸ்திரி
மன்மதலேகியம்